சாட்சிகள் வாக்குமூலம்
பாகம் 111 சுற்றறிக்கை உத்தரவு 2(11) உவிமுச பிரிவு 1 மற்றும் 2
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.
அ.வ.எண். 35/2020

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : குப்புச்சாமி (வா.சா.–1) | தொழில் | : |
| த/பெ., க/பெ. | : திருமலைசாமிகவுண்டர் | வயது | : 72 |
| கிராமம் | : ஆர்.அய்யம்பாளையம் | இனம் | : ஆண் |
| தாலுகா | : பழனி | நாள் | : 31.01.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

1973 ஆம் வருடத்திய வரைமுறைச் சட்டம் பிரிவு 10 ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்ஙனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் நாள் அளித்த சாட்சியம்.

<u>முதல் விசாரணை:</u>

நான் இந்த வழக்கில் 1 ஆம் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை சத்தியப் பிரமான நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமான வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவைதான். அவை எனக்கு நன்றாக தெரியும். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி சாட்சியத்தை நிரூபண வாக்குமூலத்தை 2 ஆம் வாதிக்காகவும் தாக்கல் செய்கிறேன். மாதிரி வரைபடம் அசல் வா.சா.ஆ.1 ஆகவும், கடந்த 12.11.1996 ஆம் தேதிய கிரைய பத்திரம் சான்று நகல் வா.சா.ஆ.2 ஆகவும், கடந்த 06.12.2019 ஆம் தேதிய பிழை திருத்தல் பத்திரம் சான்று நகல் வா.சா.ஆ.3 ஆகவும், கடந்த 27.01.2020 ஆம் தேதிய கிரைய பத்திரம் சான்று நகல் வா.சா.ஆ.4 ஆகவும், கடந்த 27.01.2020 ஆம் தேதிய மற்றொரு கிரைய பத்திரம் சான்று நகல் வா.சா.ஆ.5 ஆகவும், கடந்த 04.03.2007 ஆம் தேதிய கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்று நகல் வா.சா.ஆ.6 ஆகவும், நீதிமன்ற ஆணையர் அறிக்கை நி.ம.சா.ஆ.1 ஆகவும், வரைபடங்கள் நி.ம.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகின்றன. மேற்படி சாட்சியத்தையும், சான்றாவணங்களையும் ஏற்று நான் கோரிய பரிகாரங்களை வழங்கி உத்தரவிட வேண்டுகிறேன்.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :

(பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).

ஒம்/- S.கபாலீஸ்வரன்
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி